கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் பரீட்சை, வருடம் **I – 2022**

# சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. "அடிப்படையாதார வினாவை எடுத்துக்கொள்ளுங்கள், சட்டம் என்பது எதனால் தாபிக்கப்படுகின்து? நீதிமன்றங்களினால் தீர்மானிக்கப்படுவதிலும் வேறுபட்டது என்று சில உரையெழுத்தாளர்கள் உங்களுக்குச் சொல்வதனை நீங்கள் காண்பீர்கள்."

   Oliver Wendell Holmes, 'The Path of the Law' (1897) 10 *Harvard Law Review* 457, 460

   நீர் உடன்படுகின்றீரா? சட்டச் சிந்தனைப் பிரிவுகள் இரண்டுடன் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை ஆராய்வதுடன், நடைமுறை உதாரணங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (100 புள்ளிகள்)

2. எதிராள் மற்றும் விசாரணைசார் முறைமைகளானவை உலகின் முக்கிய இரண்டு சட்டத் தீர்ப்பளிக்கும் முறைமைகளென்பதுடன், உலகின் இரண்டு முக்கிய சட்டமுறைமைகளான பொதுச்சட்ட முறைமையும் குடியியல் சட்டமுறைமையும் இதனைப் பின்பற்றுகின்றன. இவ்விரண்டு தீர்ப்பளிக்கும் முறைமைகளும் தத்தமது நடபடிமுறை, அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் என்பவற்றைக் கொண்டுள்ள அதேவேளை, அவற்றின் தீர்ப்புக்களின் நம்பகத்தன்மை தொடர்பில் விமர்சிக்கப்படுகின்றதாயினும், அந்தந்த நியாயாதிக்களில் அவை மேலோங்கியே நிற்கின்றன.

   இவ்விரண்டு முறைமைகளிலும் 'நீதிபதியின் வகிபாகம்' என்பதுடன் குறிப்பாகத் தொடர்புபடுத்தி, மேலுள்ள கூற்றினது வலிதுடைமை மீது நுணுக்கமாக் கருத்துரை செய்க.

   (100 புள்ளிகள்)

3. தீர்ப்பு நியாயம் என்ற கருத்தேற்பினை விளக்குவதுடன், அதன் தர்க்கநியாயத்தின் மீது கருத்துரை செய்க. இலங்கையின் சட்டமுறைமையில் தீர்ப்பு நியாயமானது தொழிற்படுகின்ற விதம் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற அணுகுமுறையினது பலம் மற்றும் பலவீனம் என்பவற்றினை விபரிக்குக. பொருத்தமான அதிகார ஆதாரங்கள், தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் ஒப்பீட்டு நடைமுறைகள் என்பவற்றினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (100 புள்ளிகள்)

4. வழக்காற்றுச் சட்டமானது பயன்பாட்டினால் தாபிக்கப்பட்ட மனித செயற்பாட்டின் விதிகள் என்பதுடன் யாருக்கு அத்தகைய விதிகள் ஏற்புடையதாகுமோ அத்தகையவர்கள் மீது சட்டப்படியாக பிணிக்கின்ற விதிகள் என்றும் வரையறுக்கப்படலாம். அத்துடன், அவை அரசியல் சமூகத்தினால் ஒட்டுமொத்தமாக அல்லது சிலபகுதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சட்டத்தின் ஆதாரமாக நீதிமன்றங்களால் பின்பற்றப்படுகின்றன.

மேலுள்ள கூற்றின் பின்னணியில், இலங்கையில் சட்டரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய வழக்காறொன்றினது சட்டத்தேவைப்பாடுகளை ஆராய்க. உமது விடையினை பொருத்தமான அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

5. (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளுக்கு விடைதருக.

நீர் ஒரு வழக்கறிஞர் என்று கருதிக்கொள்க.

(அ) சேவை பெறுநரொருவர் பிரச்சினையொன்றுடன் உம்மை அணுகும்போது, அத்தகைய திறத்தவர்கள் தமது பிரச்சினைக்கான மிகவும் பொருத்தமான தீர்வளிக்கும் வழிமுறையினைத் தெரிவுசெய்து கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதற்கு நீர் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் மற்றும் சிக்கல்கள் எவை?

(50 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாள், ரோஸி மற்றும் சனத் ஆகிய புதிய சேவை பெறுநர்கள் இருவர் சட்ட ஆலோசனை பெறுவதற்காக உம்மைச் சந்திக்கின்றனர். அந்த இரண்டு சேவைபெறுநர்களைப் பற்றிய விபரங்கள் மற்றும் அவர்களின் சட்டப்பிரச்சினைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. இந்த வினாவின் பகுதி (அ) வில் நீர் வழங்கிய விடையின் அடிப்படையில், அவர்கள் பின்தொடரக்கூடிய பொருத்தமான பிணக்குத் தீர்வு வழிமுறையின் வடிவங்கள் எவை என்பது தொடர்பில் நீர் என்ன கருதுகின்றீர் ?

(i) ரோஸி என்பவள் வெற்றிகரமானதொரு தொழிலதிபர் என்பதுடன் FOMO Limited என்ற கம்பனியின் பணிப்பாளர் ஒருத்தியுமாவாள். அவளுடைய கம்பனியானது ஆழ்கடல் சுரங்கத்தொழிலில் ஈடுபட்டுவருகின்றது. ஆழ்கடல் சுரங்கத் தொழிலானது மிகவும் செலவுமிக்கது என்பதுடன், உலகில் மிகக் குறைவான நிறுவனங்களே இதில் ஈடுபட்டும் வருகின்றன. ஆழ்கடல் சுரங்கத்தொழிலில் நிபுணத்துவம் பெற்றதற்காக சர்வதேச அளவில் நன்கறியப்பட்ட சீன நிறுவனமான YOLO Limited என்ற கம்பனியுடன் ரோஸி இணைந்து செயற்படுகின்றார். கடற்படுக்கையிலிருந்தான வளங்களின் உரிமையாண்மை தொடர்பில் FOMO Limited மற்றும் YOLO Limited இடையில் பிணக்கொன்று எழுந்துள்ளது. இப்பிணக்கினால், அனைத்து சுரங்கத்தொழில் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு, இரண்டு கம்பனிகளும் பாரியளவான நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. இரண்டு தரப்பிருக்குமிடையிலான பிணக்கைத் தீர்ப்பதற்குப் போதுமான சட்டங்கள் இலங்கையில் இல்லை. இப்பிணக்கை தீர்த்துக்கொள்ள ரோஸி விரும்புகிறாள்.

(ii) சனத் என்பவன் இரத்தினபுரியில் வசிக்கும் ஒரு தொழிலதிபராவார். குழந்தைகளுக்கான மென் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஆடைகளை விற்பனைசெய்து வாழ்ந்துவருகின்றான். மாத்தறையில் வசிக்கின்ற வர்த்தகரான ரொமேஷ் என்பவன் இவனுடைய நீண்டகால வாடிக்கையாளர்களி லொருவனாவான். ரூபா.450,000 பெறுமதியான மென் விளையாட்டுப் பொருட்களுக்கு கொள்வனவுக் கட்டளையினை அவன் வழங்குகின்றான். ஒரு வாரத்தினுள் முழுத்தொகையினையும் வழங்குவதாக அவன் உறுதியளித்தான். ஆனால், ரொமேஷ் அதன்படி நடக்கத் தவறியமையினால், கூடுதலாக இரண்டு வார கால அவகாசம் பெற்றுக்கொண்டான்.

இரண்டு வாரங்களாயினும் ரொமேஷ் பணம் கொடுக்கவில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும் பணத்தை இழந்ததாகவும், பணம் கொடுக்க முடியாமல் திணறுவதாகவும் ரொமேஷ் விளக்கமளித்தான். தனிப்பட்ட கடன்கள் நிறைய இருப்பதனால், அவனுக்கு பணம் தேவைப்பட்டது. சனத் பணத்தைப் பெறவிரும்பினாலும், ஒரு வாடிக்கையாளராக ரொமேஷை இழக்க விரும்பவில்லை.

(25 x 2=50 புள்ளிகள்)
(மொத்தமாக 100 புள்ளிகள்)

6. அராலியா என்பவள் டாய்லாந்து என்ற நாட்டில் சுமார் 10 வருடங்களாக வழக்கறிஞராகத் தொழிற்படுகின்றாள். பணமீள் வசூலித்தல் வழக்குகளிலும் குடும்பச் சட்டத்திலும் நிபுணத்துவம் பெற்றவளாக அவள் திகழ்கின்றாள். ஒரு நாள், சேவைபெறுநர்கள் இருவர் அவளை நாடுகின்றனர். அவர்களிலொருவர், பிரபல நடிகையான "பபா" என்பவள், அடுத்த வாரத்தில் வருகின்றதான மிகவும் அவசரமானதொரு விவாகரத்துடன் தொடர்புபட்டவளாகவும் அவள் இருந்தாள். மற்றையவர், ரொஹான் என்பன், அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவளை அவன் வேண்டிக்கொண்டான். பபாவினுடைய வழக்கினை அவள் ஏற்றுக்கொண்டாளாயினும் வழமையாக அவள் அறவிடுகின்ற கட்டணத்தைவிடவும் இரண்டு மடங்கு அதிகமானதை அறவிட்டாள். அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை தான் எடுத்து நடாத்துவதில்லை என்ற காரணத்தினால், ரொஹானின் வழக்கினை அவள் ஏற்க மறுக்கின்றாள்.

அடுத்த வாரம், பபாவுக்கு சார்பான நிவாரணத்தை அராலியா பெறுகின்றாள். அவர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியே வரும்போது, ஊடகவியலாளர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு கேள்விகளைக் கேட்கின்றனர். "அராலியா வியப்பானதொரு வழக்கறிஞர் என்பதுடன், அவர் மூலமாக மேலும் பல வழக்குகளை எதிர்காலத்தில் தாக்கல் செய்வேன்" என்று பபா தெரிவிக்கின்றாள்.

பபாவினது வழக்கில் அராலியா வேலையாக இருந்தமையினால், தனது சேவைபெறுநரான விஜயா என்பவளினது காணி வழக்கிற்கு அவளால் தயார்படுத்த முடியாமல் போனது. வழக்கினை ஒத்திவைக்குமாறுகோரி தனது இளம் வழக்கறிஞர் ஒருவரை தன் சார்பாக நீதிமன்றத்துக்கு அவள் அனுப்பிவைத்தாள். அதனால் விஜயா ஏமாற்றத்துக்குள் ளாகின்றாள். சூடானதொரு வாக்குவாதத்தின் போது, தான் காணிச் சட்டத்தில் ஆர்வங்காட்டாமையினாலும் கடந்த இரண்டு முறை தனது தொழில்முறைக் கட்டணத்தைச் செலுத்தாமையினாலும், ஒரு புதிய வழக்கறிஞரை தேடிக்கொள்ளுமாறு விஜயாவிடம் அராலியா கூறுகின்றாள். பின்னர், நிலுவையாயிருந்த கட்டணத்தை அவள் செலுத்துகின்றாள்.

பபாவினது வழக்கில் வேலைசெய்ததன் பின்னர், பபாவும் அராலியாவும் நண்பர்களாகின்றனர். கடுமையான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் பிரதிபலிப்பாக உருவான அரசாங்கத்திற்கு எதிரான போராட்ட இயக்கமான மக்கள் போராட்டத்தில் ஓர் அங்கமாக கலந்துகொள்ளுமாறு அராலியாவை பபா அழைக்கின்றாள். மக்கள் போராட்டத்தின் முன்னணி நபராக அராலியா ஆகின்றாள். ஆர்ப்பாட்டப்பேரணியொன்றில் உரையாற்றும் போது, தனது கடமையினைச் சரியாகச்செய்ய முடியாவிட்டால் வெளியேறவேண்டும் என்று தெரிவித்து, வழக்கறிஞரொருவரான பிரதமரை அராலியா அவமதிக்கின்றாள்.

டாய்லாந்துவினது சட்டமுறைமையானது இலங்கையினதைப் போன்றது என்று கருதினால், இச்சம்பவத்திலிருந்து எழுகின்ற வழக்கறிஞர்களின் தொழில்முறை நெறிமுகைள் தொடர்பான சிக்கல்களானவை எவை? உமது விடையானது, உயர்நீதிமனறத்தின் (வழக்கறிஞர்களின் நடத்தை மற்றும் ஆசாரமுறைமை) தொடர்பான 1988 ஆம் ஆண்டின் விதிகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். (100 புள்ளிகள்)

********************